பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 03 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்கான பல அறிவிப்புகள் நடப்பாண்டு பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நாட்டின் வரிவசூல் நிர்வாக கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் கோடை காலத்தில் மின்பற்றாக்குறை ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. கன்னியாகுமரி, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஏ டி பி டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ரித்விக் - கொலம்பியாவின் நிக்கோலஸ் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்து வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்கு பிந்தைய இணையவழி கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர், வேளாண் துறையின் செயல்பாடுகளை எளிமையாக்கும் நோக்கில் நடப்பாண்டு பட்ஜெட்டில் அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளின் முன்னேற்றம் மற்றும் அவர்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் நோக்கில், ஒட்டுமொத்த நாடும் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

விவசாயத்தை மேம்படுத்துவதன்மூலம், கிராமப்புறங்களின் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று கூறிய பிரதமர், கிராமப்புற வளர்ச்சிக்கென செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களையும் பட்டியலிட்டார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்மூலம், இதுவரை நான்கு லட்சம் கோடி ரூபாய் அவர்களது வங்கிக்கணக்குகளில் செலுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

இதனால், 11 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெற்றுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறைவான வேளாண் உற்பத்தி உள்ள 100 மாவட்டங்களை தெரிவு செய்து, முன்னுரிமை அடிப்படையில் வேளாண் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான திட்டமும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு மக்களிடையே தற்போது அதிக அளவில் உள்ளதாக தெரிவித்த பிரதமர், தேவையை பூர்த்தி செய்ய தோட்டக்கலை, பால்வளம், மீன்வள உற்பத்தியை பெருக்க வேண்டும் என்றும், இதற்கான முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பிரதமரின் இந்த இணையவழி கருத்தரங்கில் நாடு முழுவதும் உள்ள வேளாண் வல்லுநர்கள், தொழில்துறை நிபுணர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் இக்கருத்தரங்கில் பங்கேற்ற மாவட்ட முன்னோடி வங்கியின் மேலாளர் திரு கே.முருகன், இந்த இணையவழி கருத்தரங்கின்மூலம், விவசாயிகள்

பொதுமக்கள் மற்றும் பயிற்சியாளர்கள் வேளாண் துறைக்கு அரசு அளித்துவரும் முக்கியத்துவம் குறித்தும், அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்தும் அறிந்துகொண்டதாக தெரிவித்தார்.

*வாய்ஸ் பைட் - கே.முருகன் - 48 செகண்ட்ஸ்*

நடப்பாண்டு பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள வேளாண் துறைக்கான அறிவிப்புகள் மற்றும் திட்டங்கள் தங்களது விவசாயப்பணிகளை எளிமையாக்கி, வருவாயை பெருக்கித்தரும் என்று இணையவழி கருத்தரங்கில் கலந்துகொண்ட நாமக்கல் விவசாயிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - விவசாயிகள் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, நாட்டின் வரிவசூல் நிர்வாக கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சிவில் கணக்கு நாள் விழாவில் பேசிய அவர், நாட்டின் பொது நிதி நிர்வாக கட்டமைப்பு நவீன தொழில்நுட்பத்தின்மூலம் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும், டிஜிட்டல் இந்தியா சேவைகள் நாட்டின் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் சென்றடைந்துள்ளதாகவும் கூறினார்.

பொது நிதிநிர்வாக கட்டமைப்பு மூலம், 60 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் வெளிப்படைத்தன்மையுடன் அரசின் சேவைகளை பெற்று வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் கோடை காலத்தில் மின்தட்டுப்பாடு ஏற்படாத வகையில், தேவைக்கேற்ப மின் உற்பத்தியை அதிகரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் தலைவர் டாக்டர் ஜெ ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் பாரத் மிகுமின் நிறுவனத்தின் மூலமாக கடலுக்கு அடியில் அமைக்கப்பட்டுவரும் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்ட அவர், இந்த திட்டத்தின் முதல் அலகில் மின் உற்பத்தி இவ்வாண்டு மே மாத இறுதிக்குள் முடிவடையும் என்றும், இரண்டாவது அலகில் ஜூன் மாதத்தில் முடிவடையும் என்றும் தெரிவித்தார்.

மாநில அரசு சார்பில், தமிழகத்தில் உள்ள அனல்மின் நிலையங்களில் இருந்தும், அணுமின் நிலையங்களில் இருந்தும், ஆறாயிரத்து 800 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருவதாக கூறிய அவர், கூடுதலாக மத்திய அரசின் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து 400 மெகாவாட் மின்சாரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் தமிழகத்திற்கு 23 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் கூடுதலாக தேவைப்படுகிறது என்றும், அதற்கேற்ப உரிய நேரத்தில் பள்ளித் தேர்வுகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழக மின்வாரியத்தின் கடன்களை குறைப்பதற்கு மத்திய – மாநில அரசுகள் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் தலைவர் டாக்டர் ஜெ ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் ஆசிரியர்களுக்கான மாநில தகுதித்தேர்வுக்கான முன்னேற்பாடுகள் குறித்து தலைமைச்செயலர் திரு முருகானந்தம் இன்று மாவட்ட ஆட்சியர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டத்தில், எவ்வித தடையும் இன்றி தேர்வுகள் நடத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இம்மாதம் ஆறாம் தேதிமுதல், ஒன்பதாம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த தேர்வுகள், மாநிலத்தில் 133 தேர்வு மையங்களில் நடைபெறவுள்ளது.

சுமார் ஒரு லட்சம் பேர் இந்த தேர்வை எழுதவுள்ளனர்.

மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 52 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னாள் படை வீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------

பிரதமரின் மக்கள் மருந்தகம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில், மதுரை காளவாசல் பகுதியில் பேரணி நடைபெற்றது.

---------------

திண்டுக்கல் மாவட்டம் வத்லகுண்டுவில் பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் குப்பைகளை தரம் பிரித்து வழங்க வலியுறுத்தும் விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடைபெற்றது.

--------------

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு 73 பயணிகளுடன் புறப்பட்டு சென்ற சிவகங்கை கப்பல் கடல் சீற்றத்தின் காரணமாக நாகை துறைமுகத்திற்கு திரும்பி வந்தது.

----------

நாமக்கல் மாவட்டம் சாலப்பாளையம் பகுதியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டில் 350-க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் கலந்துகொண்டனர். இதில் 700 காளைகள் பங்கேற்றன.

---------------

தென்காசி மாவட்டம் செங்கோட்டையிலிருந்து, கேரளாவுக்கு 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்களை கடத்த முயன்ற இளைஞரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Santiago**–வில் நடைபெற்றுவரும் ஏ டி பி டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ரித்விக் **Bollipalli** - கொலம்பியாவின் நிக்கோலஸ் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், இந்த இணை, 4-6, 7-6, 10-5 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் **Andreozzi** – பிரான்சின் **Theo Arribage** இணையை வென்றது

**-------------**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் கேரளா - ஜாம்ஷெட்பூர் அணிகள் இன்று மோதுகின்றன.

கொச்சியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

-------------

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், தில்லி – பெங்களூரு அணிகள் இன்று மோதுகின்றன.

பெங்களூருவில இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>**